INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

**10 ஜனவரி 2019**

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM
EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

**பத்திரிகை அறிக்கை: இலங்கையின் புதிய இராணுவப் பிரதானி பிரயாணம் செய்தால் அவருக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை மேற்கொள்ளப்படும்**

**ஜொகானஸ்பேர்க்**: பெயர்போன போர்க்குற்றவாளியை இராணுவப் பிரதானியாக நியமித்த ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனாவின் முடிவானது அதிர்ச்சியளிக்கக்கூடிய இலங்கையின் புதிய அடிமட்டமான செயலாகும். மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா 2009 ஆம் ஆண்டு வைத்தியசாலைகள், உணவு விநியாகிக்கும் இடங்கள், இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த முகாம்கள் மீது மீண்டும் மீண்டும் வேண்டுமென்று நடாத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அவர் வழிநடாத்திச் சென்ற 58 படைப்பிரிவே பொறுப்பாகும், இந்த தாக்குதல்கள் குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் ஆயிரக்கணக்கான மக்களின் இறப்புக்கு வழிவகுத்தது அத்துடன் இதில் அவருடைய பங்கிற்காக ஐக்கிய நாடுகளின் விசாரணையில் அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டது. சில்வாயினுடைய நேரடிக்கட்டளையின் கீழ் இருந்த படையணிகள் பெண்கள், குழந்தைகளின் படுகொலைகளுக்கும், நூற்றுக்கணக்கானவர்கள் வலிந்து காணாமற்போன சம்பவங்கள் என்பவற்றுடனும் சித்திரவதைகள் மற்றும் பாலியல் வன்முறைகளுடன் தொடர்புபட்டிருந்ததாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

*“இலங்கை தற்போது ஒரு இராணுவப் பிரதானியைக் கொண்டுள்ளது அவருக்கு ஏதாவது ஒரு நாடு முட்டாள்தளமாக விசா வழங்குமானால் அவர் வெளிநாட்டுக்கு பிரயாணம் செய்யும் ஒவ்வொருதடவையும் கைது செய்யப்படும் ஆபத்தில் உள்ளார்” என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார். மேஜர் ஜெனரல் சில்வா பற்றி நாங்கள் ஒரு விரிவான ஆவணக் கோவையைத் தயாரித்துள்ளளோம் அதனை நாங்கள் விரைவில் வெளியிடுவோம், சந்தர்ப்பம் ஏற்படும்போது சர்வதேசக் குற்றங்களுக்காக அவர் மீது குற்றஞ்சுமத்துவதற்கு தேவையான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன என நாம் நம்புகின்றோம். பத்து ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவர் இலங்கையில் குற்றங்கள் புரிந்தமைக்காக மிகவும் வேண்டப்பட்ட மனிதர், துர்அதிஸ்டவசமாக அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படுவதற்கு பதிலாக அவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்”.*

2009 ஆம் ஆண்டு போரில் உயிர் தப்பி நாடுகடந்துவாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான தமிழர்கள் சில்வா இது போன்ற மூத்த இராணுவப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுள்ளமை குறித்து பெரிய அச்சத்தை வெளியிட்டுள்ளனர்.

“அந்தப் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பமுடியாத ஒரு அவமதிப்பு இதுவாகும் அத்துடன் இது இலங்கையில் எந்த நல்லிணக்க முயற்சியையும் பாதிக்கும்” என சூக்கா தெரிவித்தார். “ என்ன விடயத்தை நினைத்து முழு நாட்டுக்கும் அவமரியாதையை ஏற்படுத்தி, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜபக்சவின் நெருங்கிய நண்பராக அவருடன் ஒரே படையணியில் ஒன்றாக பணியாற்றிய ஒரு மனிதருக்கு ஜனாதிபதி இவ்வாறு பதவியுயர்வு வழங்கினார் என்பதை நாங்கள் கற்பனை செய்துபார்க்க முடியாதுள்ளது”.

18 மே 2009 இல் வெள்ளைக்கொடி சரணடைவுகள் இடம்பெற்ற இடத்தில் சில்வா தனிப்பட்டரீதியில் பிரசன்னமாகியிருந்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றார், அத்துடன் அந்தப்பிரதேசத்திற்கு அவர் கட்டளையிடும் அதிகாரியாக இருந்தார் என்பதையும் உறுதிப்படுத்தியிருக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளின் (எல்.ரீ.ரீ.ஈ)அரசியற் தலைவர்கள் சரணடைந்த போது சில்வா அவர்களுடன் கை குலுக்கி கொண்டதை தான் பார்த்ததாக சாட்சி ஒருவர் தெரிவிக்கின்றார், சில மணித்தியாலங்களின் பின்னர் சரணடைந்தவர்களின் இறந்த உடல்கள் வீதியோரமாக காணப்பட்டன. அவர்கள் “வெள்ளைக் கொடியுடன்” பாதுகாப்பாக சரணடைய முடியும் என அரசாங்கம் உறுதிப்பாடு வழங்கியபோதும் தலைவர்கள் உடனடியாகவே படுகொலை செய்யப்பட்டதாக ஐ நா விசாரணை தெரிவித்துள்ளது.

இறுதி கட்டப் போரின் போது, மேஜர் ஜெனரல் சில்வா ஜெனரல் ஜகத்ஜெயசூரியாவிற்கு கீழ் நேரடியாகப் பணியாற்றினார். 2017 இல் இலத்தீன் அமெரிக்காவில் இராஜதந்திரியாக இருந்த ஜெனரல் ஜெயசூரியாவிற்கு எதிராக 2008-9 ஆம் ஆண்டுகளில் அவருடைய கட்டளை நிலை தொடர்பில் ITJP வழக்குப் பதிவு செய்தது. பிரேசில் மற்றும் சிலியில் இந்த வழக்கை ஏற்றுக் கொள்வதற்கான சட்டவரையறை காணப்பட்டது, சுயாதீனமான ஒரு சர்வதேச நீதிமன்றில் தனது குற்றமற்ற தன்மையை சோதித்து பார்க்காமல் ஜெயசூரியா வழக்குப் பதிவு செய்வதற்கு முதல்நாள் நாட்டைவிட்டு தப்பிச் சென்றார்.

போர்க் குற்றங்களில் சவேந்திர சில்வாவின் பங்கு தொடர்பில் பல ஆண்டுகளாக ஊடகங்களிலும் பெரியளவில் செய்திகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. 2011 இல் சில்வாவிற்கு எதிராக நியூயோக்கில் போக்குற்ற வழக்கு தொடரப்பட்டது ஆனால் அவருக்கு இராஜதந்திரப் பாதுகாப்பு இருந்தமையால் அது தோல்வியடைந்தது. 2012 இல் மனித உரிமைகளுக்கான ஐ நாவின் முன்னாள் உயர்த்ஸ்தானிகர் நவிப்பிள்ளை ஐ நா பொதுச் செயலாளரிடம் சவேந்திர சில்வா ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட போர்க்குற்றவாளியாக இருப்பது தொடர்பில் தனது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தார். 2012 இல் போர்க்குற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக சில்வா உயர் ஐ நா அமைதிகாக்கும் ஆலோசனைக்குழுவில் இருந்து நீக்கப்பட்டார். தென் ஆபிரிக்கா அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று சில்வா தமது நாட்டில் இராஜதந்திர பதவிக்கு நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போது வழக்குத் தொடரப் போவதாக அச்சுறுத்தல் விடுத்தது.

அண்மைய ஆண்டுகளில் மேஜர் ஜெனரல் சில்வாவின் பதவியுயர்கள் தீவிரமாக ஆராயப்பட்டு விமர்சிக்கப்பட்டிருந்தால் “இறுதியாக இடம்பெற்ற சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்கலாம்” என சூக்கா தெரிவித்தார். 2017 இல் சில்வா இலங்கை இராணுவத்தின் உதவி ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டு மனித உரிமைகள் மனிதாபிமானச் சட்ட அலுவலகத்திற்குப் பொறுப்பாகப் போடப்பட்டார். தன்னுடன் நின்று சண்டையிட்ட தன்னுடைய படையணியில் இருந்தவர்களுக்கு பணம் சேகரிப்பதற்காக விளையாட்டு நிகழ்வுகளை நடாத்துவதற்கு கோகா கோலா மற்றும் CEAT இடமிருந்து நிதியினைக் கூடப் பெற்றுக் கொண்டார். “*போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கு அவருக்கு எதிராக வழக்குத் தொடர்வது பற்றி இலங்கையின் சட்டமா அதிபர் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும்*” என சூக்கா தெரிவித்தார்.

சில்வாவினுடைய உத்தியோகபூர்வ இராணுவ வாழ்க்கை வரலாற்றில் அவர் அமெரிக்கா, இஸ்ரேல், நெதர்லாந்து, கிறீஸ், இத்தாலி, பிரான்ஸ், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் பயிற்சி வழங்க்கட்டதாகவும் அத்துடன் உளவியல் ரீதியான நடவடிக்கைகள் பற்றி அமெரிக்க இராணுவத்தால் பயிற்சி வழங்கப்பட்டாகவும் தெரிவிக்கின்றது. இலங்கை இராணுவத்திற்கான சர்வதேச மனிதாபிமானச் சட்ட கற்கை நெறியினையும் அவர் கற்றுக் கொண்டதாக அது மேலும் தெரிவித்துள்ளது.
முற்றும்.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT